StudentBounty.com

# INTERNATIONAL INDIAN SCHOOL, DAMMAM

## SUMMATIVE ASSESSMENT I - SEPTEMBER - 2013

## SUBJECT - TAMIL
## CLASS – X

Time: 3 Hours — Maximum Marks: 90
நேரம்: 3 மணி — மொத்த மதிப்பெண்கள்: 90

**The question paper is divided into four sections:**
**இக் கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

| | | | | |
|---|---|---|---|---|
| SECTION: A | | Reading comprehension | - | 15 Marks |
| பிரிவு: | அ | படித்தல் (உரைநடைப்பகுதி) | - | 15 மதிப்பெண்கள் |
| SECTION: B | | Writing | - | 20 Marks |
| பிரிவு: | ஆ | எழுதுதல் | - | 20 மதிப்பெண்கள் |
| SECTION: C | | Grammar | - | 15 Marks |
| பிரிவு: | இ | இலக்கணம் | - | 15 மதிப்பெண்கள் |
| SECTION: D | | Literature/Text Books | - | 40 Marks |
| பிரிவு: | ஈ | இலக்கியம்/தமிழ்ப்பாடநூல் | - | 40 மதிப்பெண்கள் |

<u>குறிப்பு :</u>

- கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.
- விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.
- வினாக்களின் எண்களை உரிய இடத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

## பிரிவு - அ

**1. கீழ்வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக.** **(5)**

பண்பை ஆளும் பான்மையால் - சான்றாண்மை என்னும் சரித்திரத்தால் பழம் பெருமை பெற்றது நம் பாரதத் திருநாடு. கடல் கடந்து செல்லும் வாணிகச் சிறப்பால் உலகாண்ட இனம் நம்மினம். அறுவைச் சிகிச்சைக்கு வழிகண்டு மருத்துவத்தில் மாண்பை விதைத்த இனம் நம்மினம். இறையுணர்வில் இங்கிதம் கண்டு, செங்கற் சுவர் எழுப்பி, குளிப்பதற்கோர் பெருங்குளம் கண்டு, உடல் நலத்துக்குத் தொட்டிலாய் நின்ற பெருமை நமக்குண்டு. பண்பால் பகை வென்று பகைவனின் மகளையே மணந்து நட்புக்கு வழிவகுத்த மன்னர்கள் பலர் வாழ்ந்த பெருமையும் நமக்குண்டு.

1. எத்தகு சரித்திரம் படைத்தது நம் பாரதத் திரு நாடு?

அ) சான்றாண்மை
ஆ) பழமை
இ) பேராண்மை
ஈ) ஊராண்மை

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

2. எத்தகைய சிறப்பால் உலகாண்டது நம்முடைய இனம்?

அ) தானியச் சிறப்பு
ஆ) வாணிகச் சிறப்பு
இ) உலகச் சிறப்பு
ஈ) கடற் சிறப்பு

3. எந்தத் துறையில் மாண்பை விதைத்தது நம் இனம்?

அ) விவசாயம்
ஆ) அரசாட்சி
இ) மருத்துவம்
ஈ) கவிதை

4. செங்கற் சுவரால் பெருங்குளம் எழுப்பியது எதற்காக?

அ) குளிப்பதற்கு
ஆ) தூங்குவதற்கு
இ) வாழ்வதற்கு
ஈ) மதிற் சுவருக்கு

5. மன்னர்கள் எதனால் பகை வென்றனர்?

அ) பண்பால்
ஆ) அன்பால்
இ) கோபத்தால்
ஈ) வீரத்தால்

**2. கீழ்வரும் பத்தியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவிற்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

சிலப்பதிகாரம், புகாரில் நெடு நிலை மாடங்கள் பல இருந்ததையும், அழகான வேலைப்பாடுகளோடு கூடிய சாரளங்கள் மாளிகைகளில் பொருத்தப்பட்டிருந்ததையும், சரக்குகள் நிறைந்த பண்டக சாலைகளையும், மாளிகைகளில் நிலாமுற்றங்கள் அமைக்கப்பட்டிருந்ததையும் குறிப்பிடுகின்றது. மதுரை நகரிலும் மாடங்கள் நிறைந்திருந்தன. "நெடுமாடக்கூடல்", "நான்மாடக்கூடல்", சேய்மாடக்கூடல்", நீள்மாடக்கூடல்" என்ற அடைகளால் பல மாடிகள் வானோக்கி வளர்ந்த கட்டடப் போக்கினைப் பெற்றிருந்ததை அறியலாம். மதுரையில் நீளமான வாயில் நெடுங்கதவோடு அமைந்திருந்தது. மன்னன் பேரிசைக் கோயிலும் கடவுளர் கோயில்களும் பள்ளிகளும் அங்குச் சிறந்து விளங்கின. வஞ்சியில் சேரன் வேண்மாளுடன் வெள்ளி மாடத்தில் இருந்தானெனச் சிலம்பு கூறுகின்றது. வஞ்சியில் மன்றங்களும் சதுக்கங்களும் நிறைந்திருந்தன என மணிமேகலை கூறுகின்றது.

1.நெடு நிலை மாடங்கள் அமைந்த இடம்

அ) வஞ்சி நகரம்
ஆ) புகார் நகரம்
இ) மதுரை நகரம்
ஈ) காஞ்சி நகரம்

2. பண்டக சாலையில் நிறைந்திருந்தவை

அ) விளையாட்டுப் பொருட்கள்
ஆ) மணல்கள்
இ) சாக்குகள்

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

3. நிலா முற்றங்கள் எங்கு அமைந்திருந்தன?

அ) தெருக்கள்
ஆ) ஆறுகள்
இ) மாளிகைகள்
ஈ) கடல்கள்

4. மன்னர்கள் காலத்தில் சிறந்து விளங்கியவை

அ) ஆடல் பாடல்கள்
ஆ) பட்டி மன்றங்கள்
இ) விழாக்கள்
ஈ) கடவுளர் கோயில்களும் பள்ளிகளும்

5. மன்றங்களும் சதுக்கங்களும் பற்றிய செய்திகளைக் கூறும் நூல்

அ) சிலப்பதிகாரம்
ஆ) மணிமேகலை
இ) வளையாபதி
ஈ) குண்டலகேசி

**3. கீழ்வரும் பத்தியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாவிற்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதவும். (5)**

எம்.ஜி.ஆர். என்ற பெயரில் புகழ்பெற்ற மருதூர் கோபாலமேனன் இராமச்சந்திரன் ஜனவரி 17, 1917 முதல் டிசம்பர் 24, 1987 வரை தமிழ் திரைப்பட நடிகராகவும், 1977 முதல் இறக்கும் வரை தமிழ்நாட்டில் தொடர்ந்து மூன்று முறை முதலமைச்சராகவும் இருந்தவர். எம். ஜி. சக்கரபாணி என்பவரின் தம்பியான இவர் தொடக்க காலத்தில் நாடகங்களில் நடித்து வந்தார். காந்தியடிகளின் கருத்துக்களால் ஈர்க்கப்பெற்று தேசிய முற்போக்கு காங்கிரஸில் இணைந்தார்.

சதிலீலாவதி என்ற திரைப்படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமாகி, கதாநாயகனாக மாறிய பிறகு, அண்ணாவின் அரசியல் கருத்துக்களில் ஈர்க்கப்பெற்று, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார். அண்ணாவின் மறைவிற்குப்பிறகு திராவிட முன்னேற்றக்கழகத்திலிருந்து கருணாநிதியால் நீக்கப்பட்டார். அதன்பின் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் என்ற கட்சியை தொடங்கி, தேர்தலில் நின்று, தொடர்ந்து மூன்று முறை தமிழகத்தில் வெற்றி பெற்று முதலமைச்சரானார். இவர் இந்தியாவின் உயரிய விருதுகளில் ஒன்றான பாரத ரத்னா விருதினைப் பெற்றவர் ஆவார்.

1. எம்.ஜி.ஆரின் முழுமையான பெயர் யாது?

அ) கோபாலகிருஷ்ணன்
ஆ) ராமச்சந்திரன்
இ) மருதூர் கோபாலமேனன் ராமச்சந்திரன்
ஈ) ராமச்சந்திர கோபாலமேனன்

2. எந்த ஆண்டு முதல் முதலமைச்சராகப் பணியாற்றினார்?

அ) 1970
ஆ) 1987
இ) 1978
ஈ) 1977

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

3. காந்தியடிகளின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட எம்.ஜி.ஆர். எங்கு சேர்ந்தார்?

அ) அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம்
ஆ) திராவிட முன்னேற்றக்கழகம்
இ) தேசிய முற்போக்கு காங்கிரஸ்
ஈ) மக்கள் முன்னேற்றக்கழகம்

4. எம்.ஜி.ஆர். தொடங்கிய கட்சி யாது?

அ) தி.மு.க.
ஆ) அ.தி.மு.க.
இ) காங்கிரஸ்
ஈ) ம.மு.க.

5. எம்.ஜி.ஆர். பெற்ற உயரிய விருது யாது?

அ) பத்மபூஷன்
ஆ) பத்மஸ்ரீ
இ) கேள் ரத்னா
ஈ) பாரத் ரத்னா

## பகுதி - ஆ

4. வெள்ளத்தில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்றியதற்காக அண்ணா விருது பெற்ற உன் நண்பனைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதுக. 8

**(அல்லது)**

நீ குடியிருக்கும் பகுதியில் விளையாட்டுத்திடல் ஒன்று அமைத்துத்தர வேண்டி மாவட்ட ஆட்சியாளருக்கு கூட்டு விண்ணப்பம் எழுதுக.

(உமது முகவரி: ராஜி / ராகுல். கதவு எண் - 43, ஃப்ரப் ரோடு, காமராசர் சாலை, கோவை - 623005 எனக் கொள்க.)

5. ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று வரைக. 8

அ) முன்னுரை - சுத்தம் - சுகாதாரம் - ஆரோக்கியமான வாழ்வு - வளமான சமுதாயம் - முடிவுரை

**(அல்லது)**

ஆ) முன்னுரை - கல்வியின் நோக்கம் - பயன்கள் - முன்னேற்றப்பாதை - சமுதாய மேம்பாடு - அனைவருக்கும் கல்வி - முடிவுரை

**(அல்லது)**

இ) முன்னுரை - நீரின் அவசியம் - வீண் விரயம் செய்யாமை - நீர் சேமிப்பு முறையைக் கடைபிடித்தல் - செழிப்பான நாடு - முடிவுரை

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

6. நீ வசிக்கும் பகுதியில் நடைபெற்ற 'ஓவியக்கண்காட்சி' குறித்து ஓர் அறிக்கை எழுதுக.

**(அல்லது)**

உனது பள்ளியில் நடைபெற்ற 'முதலுதவி முகாம்' குறித்து ஓர் அறிக்கை எழுதுக. **4**

## பகுதி - இ

**7) சான்று தருக. (எவையேனும் மூன்று மட்டும்)** **3**

1) ஔகாரக் குறுக்கம்

அ) மருண்ம்
ஆ) ஐம்பது
இ) வௌவால்
ஈ) கஃறீது

2) குறிப்புப் பெயரெச்சம்

அ) அவன் பொன்னன்
ஆ) கயல்விழி படித்தாள்
இ) உண்ட இளங்கோவன்
ஈ) நல்ல பையன்

3) இரட்டைக் கிளவி

அ) தீ தீ
ஆ) சலசல
இ) எறி எறி
ஈ) வா வா

4) மறைவினை

அ) செய்யேன்
ஆ) நீயே செய்
இ) கை வலிக்கும்
ஈ) செய்வேன்

5) உவமத்தொகை

அ) விற்புருவம்
ஆ) பவளம் போன்ற வாய்
இ) பல்முத்து
ஈ) பாத மலர்

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

**8) நிரப்புக. (எவையேனும் மூன்று மட்டும்)**

1) உவமை, உவமேயம் ஆகிய இரண்டிற்கும் இடையில் வரும் உருபு ________________ எனப்படும்.

அ) தொகை உவமை
ஆ) உவம உருபு
இ) உவமானம்
ஈ) விரியுவமை

2) தான் அறியாத ஒரு பொருளை அறிந்து கொள்வதற்காகப் பிறரிடம் வினவுவது ___________

அ) கொளல் வினா
ஆ) ஐய வினா
இ) அறிவினா
ஈ) அறியா வினா

3) 'மாடு' பால் கறக்கும் - இதில் 'மாடு' என்னும் சொல் ____________________ ஆகும்.

அ) வெளிப்படை
ஆ) விரவுப் பெயர்
இ) அஃறிணைப் பொது
ஈ) உயர்திணைப் பொது

4) ஓர் எச்சவினை பெயரைக் கொண்டு முடிந்தால், அது ______ எனப்படும்.

அ) வினையெச்சம்
ஆ) பெயரெச்சம்
இ) வினைமுற்று
ஈ) முற்றெச்சம்.

5) 'ம்' என்னும் மெய்யெழுத்து தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலித்தல் ________ எனப்படும்.

அ) ஐகாரக்குறுக்கம்
ஆ) ஔகாரக்குறுக்கம்
இ) மகரக்குறுக்கம்
ஈ) ஆய்தக்குறுக்கம்

**9. கூறியவாறு செய்க. (எவையேனும் மூன்று மட்டும்)** **3**

1) பெரியன் - இதில் உள்ள நிலைமொழியை எழுதுக.

அ) பெரிய
ஆ) பெருமை
இ) பெரி
ஈ) அன்

2) நடந்தான் - இதில் உள்ள இறந்தகால இடைநிலையை எழுதுக.

அ) நட
ஆ) ந்
இ) க்

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

3) ஓடு ஓடு - இதன் இலக்கணக்குறிப்பை எழுதுக.

ஆ) இனங்குறித்தல்
ஆ) அடுக்குத்தொடர்
இ) இரட்டைக்கிளவி
ஈ) ஒன்றொழி பொதுச்சொல்

4) பாடுவாயா? என்ற வினாவிற்கு ஆடுவேன் என பதில் கூறுதல் - இதன் இலக்கணக்குறிப்பு எழுதுக.

அ) இனமொழி விடை
ஆ) வினா எதிர் வினாதல் விடை
இ) ஏவல் விடை
ஈ) மறை விடை

5) பவள வாய் - இதனை உருவகமாக மாற்றுக.

அ) பவளம் போன்ற வாய்
ஆ) பவளம் ஒப்ப வாய்
இ) வாய்பவளம்
ஈ) வாய் போன்ற பவளம்

**10. இலக்கணக்குறிப்பு தருக. (எவையேனும் மூன்று மட்டும்)** **3**

1) விரல் பூ

அ) உவம உருபு
ஆ) உவமை
இ) உருவகம்
ஈ) உவமைத்தொகை

2) மீமிசை

அ) இனமொழி விடை
ஆ) ஏவல் விடை
இ) மறைவிடை
ஈ) ஒருபொருட்பன்மொழி

3) ஐவர் கோலம் இட்டனர்

அ) ஒன்றொழி பொதுச்சொல்
ஆ) ஆகு பெயர்
இ) விகாரச்சொல்
ஈ) அன்மொழித்தொகை

4) செல்வி வந்தனள், போயினள்

அ) வினையெச்சம்
ஆ) முற்றெச்சம்
இ) பெயரெச்சம்
ஈ) எச்சம்

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

5) கடலை

அ) ஆய்தக்குறுக்கம்
ஆ) ஔகாரக்குறுக்கம்
இ) ஐகாரக்குறுக்கம்
ஈ) மகரக்குறுக்கம்

**11. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. (எவையேனும் மூன்று மட்டும்)** 3

1) அ) நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து வரும் லகர, ளகரங்கள் வருமொழியிலுள்ள தகரத்தோடு சேரும்போது ஆய்தமாகத் திரியும்.
ஆ) நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து வரும் லகர, ளகரங்கள் வருமொழியிலுள்ள தகரத்தோடு சேரும்போது றகர மாகத் திரியும்.
இ) நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து வரும் லகர, ளகரங்கள் வருமொழியிலுள்ள தகரத்தோடு சேரும்போது டகர மாகத் திரியும்.
ஈ) நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து வரும் லகர, ளகரங்கள் வருமொழியிலுள்ள தகரத்தோடு சேரும்போது னகர மாகத் திரியும்.

2) அ) முற்றுப்பெறாத வினைச்சொற்கள் வேறொரு வினைமுற்றைக் கொண்டு முடிதல் வினையெச்சம் ஆகும்.
ஆ) முற்றுப்பெறாத வினைச்சொற்கள் வேறொரு வினைமுற்றைக் கொண்டு முடிதல் பெயரெச்சம் ஆகும்.
இ) முற்றுப்பெறாத வினைச்சொற்கள் வேறொரு வினைமுற்றைக் கொண்டு முடிதல் வினைமுற்று ஆகும்.
ஈ) முற்றுப்பெறாத வினைச்சொற்கள் வேறொரு வினைமுற்றைக் கொண்டு முடிதல் எச்சம் ஆகும்.

3) அ) ஒரு சொல் முன் பின் சேர்ந்து வரும் சொல்லின் குறிப்பால் ஆண்பாலையோ பெண்பாலையோ உணர்த்தி வருவது விகாரச்சொல் ஆகும்.
ஆ) ஒரு சொல் முன் பின் சேர்ந்து வரும் சொல்லின் குறிப்பால் ஆண்பாலையோ பெண்பாலையோ உணர்த்தி வருவது தொகை குறிப்புச்சொல் ஆகும்.
இ) ஒரு சொல் முன் பின் சேர்ந்து வரும் சொல்லின் குறிப்பால் ஆண்பாலையோ பெண்பாலையோ உணர்த்தி வருவது வினைகுறிப்புச்சொல் ஆகும்.
ஈ) ஒரு சொல் முன் பின் சேர்ந்து வரும் சொல்லின் குறிப்பால் ஆண்பாலையோ பெண்பாலையோ உணர்த்தி வருவது ஒன்றொழிபொதுச்சொல் ஆகும்.

4) அ) தெற்கு + திசை = தெற்குதிசை எனப் புணரும்
ஆ) தெற்கு + திசை = தென்திசை எனப் புணரும்
இ) தெற்கு + திசை = தெற்குத்திசை எனப் புணரும்
ஈ) தெற்கு + திசை = தெள்திசை எனப் புணரும்

5) அ) உவமை, உவமேயம் ஆகிய இரண்டையும் பொருத்துகின்ற உவம உருபு வெளிப்படையாக வருவது உவமைத்தொகை ஆகும்.
ஆ) உவமை, உவமேயம் ஆகிய இரண்டையும் பொருத்துகின்ற உவம உருபு வெளிப்படையாக வருவது தொகையுவமை ஆகும்.
இ) உவமை, உவமேயம் ஆகிய இரண்டையும் பொருத்துகின்ற உவம உருபு வெளிப்படையாக வருவது விரியுவமை ஆகும்.
ஈ) உவமை, உவமேயம் ஆகிய இரண்டையும் பொருத்துகின்ற உவம உருபு வெளிப்படையாக வருவது உருவக மாற்றம் ஆகும்.

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

## பகுதி - ஈ

12. கீழ்வரும் பத்தியைப்படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5

இயல், இசை, நாடகம் எனும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது தமிழ். சிலப்பதிகாரத்தை முத்தமிழ்க் காப்பியம் என்றே ஏத்துவர். உலகில் பேசப்படும் மொழிகளுள் தமிழின் பழமையையோ அதன் பெருமையையோ எம்மொழியும் நெருங்கவியலாது. தமிழ்மொழி இறவா, இலக்கிய, இலக்கண வளம்கொண்டு தனக்கெனத் தனி நோக்கும் போக்கும் கொண்டுள்ளது. இவையாவும் தமிழ்மொழியின் தனித்தன்மைகளே. உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள். இவற்றின் மொத்த அடிகள் 26,350. அக்காலத்தே இவ்வளவிற்கு விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை என்பது உலக இலக்கியங்களை ஆய்ந்த கமில்சுவலபில் என்னும் செக் நாட்டு மொழியியல் பேரறிஞரின் முடிவு.

மாக்சுமுல்லர் என்னும் மொழி நூலறிஞரோ தமிழே மிகவும் பண்பட்ட மொழியென்றும், அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழியென்றும் பாராட்டியிருக்கின்றார். நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழைமையானது தொல்காப்பியம். தொல்காப்பியரின் ஆசிரியராகிய அகத்தியர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் எழுதினார். அந்நூலுக்கு அகத்தியம் என்று பெயர்.

1) முத்தமிழ்க்காப்பியம் என்றழைக்கப்பெறுவது எது?

அ) மணிமேகலை
ஆ) சிலப்பதிகாரம்
இ) தொல்காப்பியம்
ஈ) நன்னூல்

2) சங்க இலக்கியங்களின் மொத்த அடிகள் ______________

அ) 23,650
ஆ) 25,630
இ) 25,560
ஈ) 26,350

3) நமக்குக் கிடைத்த மிகப் பழமையான நூல் எது?

அ) கம்பராமாயணம்
ஆ) பெரியபுராணம்
இ) தொல்காப்பியம்
ஈ) திருக்குறள்

4) தொல்காப்பிய நூலின் ஆசிரியர் ______________

அ) அகத்தியர்
ஆ) திருவள்ளுவர்
இ) கம்பர்
ஈ) சேக்கிழார்

5) தமிழ் மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறியவர் யார்?

அ) கபில்சுவலபில்
ஆ) மாக்சுமுல்லர்

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

13. கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை எடுத்து எழுதுக. 5

ஆய கலைகள் அறுபத்து நான்கு என்பர். அத்தகைய கலைகளுள் பேச்சுக்கலையும் ஒன்று. இது நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமையத்தக்க அரியதொரு கலை. இது மக்களுக்கு அறிவு புகட்டி அவர்களை உயர்ந்த இலட்சியப் பாதையிலே அழைத்துச் செல்லும் வன்மையுடையது. மேடைப்பேச்சில் நல்ல தமிழைக் கொண்டு மக்களை ஈர்த்தோர் தமிழ்த்தென்றல் திரு. வி. க., பேரறிஞர் அண்ணா, ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், குன்றக்குடி அடிகளார் முதலியோர் ஆவர்.

பேச்சு வேறு, மேடைப்பேச்சு வேறு. வெறும்பேச்சுக்கும் மேடைப்பேச்சுக்கும் வேறுபாடு உண்டு. பேச்சில் உணர்ந்ததை உணர்ந்தவாறு தெரிவித்தால் போதுமானது; ஆனால், மேடைப்பேச்சிலோ உணர்ந்ததை உணர்த்தும் வகையிலும் தெரிவிக்க வேண்டும். பேச்சில் கேட்கின்றவனைக் கேட்கின்றவனாகவே மதிக்கலாம். ஆனால், மேடைப்பேச்சிலோ கேட்கின்றவனை மதிப்பிடுவோனாக மதிக்க வேண்டும். பிறருக்கு எழுதி உணர்த்துவதைக் காட்டிலும் இனியமுறையில் பேசி உணர்த்தும் மேடைப்பேச்சு, முறையான மிகுந்த பயனை நல்கும் எனலாம்.

1) ஆய கலைகள் எத்தனை?

அ) 66
ஆ) 54
இ) 46
ஈ) 64

2) நுண்ணிய நூல் பல கற்றவற்கு அமையத்தக்க அரியதொரு கலை ___________

அ) ஓவியக்கலை
ஆ) பேச்சுக்கலை
இ) எழுத்துக்கலை
ஈ) இசைக்கலை

3) மேடைப்பேச்சில் உணர்ந்ததை எவ்வாறு தெரிவிக்க வேண்டும்?

அ) உணரும் வகையில்
ஆ) உணர்த்தும் வகையில்
இ) அறியும் வகையில்
ஈ) ஆக்கும் வகையில்

4) மேடைப்பேச்சில் சிறந்து விளங்கியவர்களுள் ஒருவர்

அ) கணிமேதாவியார்
ஆ) திருவள்ளுவர்
இ) இளங்கோவடிகள்
ஈ) பேரறிஞர் அண்ணா

5) பேச்சுக்கலை மக்களுக்கு புகட்டுவது யாது?

அ) அறிவு
ஆ) செல்வம்
இ) அடக்கம்
ஈ) மேன்மை

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

**14. கீழ்க்காணும் செய்யுள் வரிகளைப் படித்து அதனைத்தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** **4**

'வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி
நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோஎனத்
தேரா மன்னா செப்புவ துடையேன்'

1. 'கோயில்' என்பது எது?

அ) வீடு
ஆ) அரண்மனை
இ) கடவுள்
ஈ) அரசர்

2. 'கோயில் மன்னனைக் குறுகினள்' - யார்?

அ) மணிமேகலை
ஆ) மாதவி
இ) கோப்பெருந்தேவி
ஈ) கண்ணகி

3. 'தேரா மன்னா' - இச்சொல் யாரைக்குறிக்கிறது?

அ) பாண்டிய மன்னன்
ஆ) சோழ மன்னன்
இ) சேர மன்னன்
ஈ) மாசாத்துவான்

4. 'செப்புவது' - என்பதன் பொருள் யாது?

அ) இகழ்வது
ஆ) பழிப்பது
இ) சொல்வது
ஈ) புகழ்வது

**15. விடையளிக்க (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)** **10**

1) கடல்வாணிகம் மற்றும் உழவுத்தொழில் குறித்து எழுதுக.

2) மேடைப்பேச்சின் கூறுகளை விளக்குக.

3) தமிழ் செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகளுள் ஏதேனும் ஐந்தனை விளக்குக.

4) தமிழரின் இசைக்கலை குறித்து எழுதுக.

5) பெண்களுக்குச் சொத்துரிமை, குழந்தைத் திருமண எதிர்ப்பு ஆகியன குறித்து ஈ.வே.ரா கூறியவற்றைத் தொகுத்து எழுதுக.

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

**16. எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.** **8**

1) தேரா மன்னா என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?

2) காலமறிதலை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

3) தமிழ்விடு தூது பகுதியில் அறியப்படும் செய்தி யாது?

4) தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை, நற்றிணைப்பாடல் வழித் தொகுத்து எழுதுக.

**17. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க.** **8**

1) மெல்ல மெல்ல மற! என்னும் சிறுகதையின் மையக்கருத்தை மாறாமல் சுருக்கி வரைக.

2) பரிதிமாற்கலைஞரின் தமிழ்த் தொண்டினை விளக்குக.

3) அகழாய்வு குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

>>>>>>>>>>>><<<<<<<<<<<<<

www.StudentBounty.com
Homework Help & Pastpapers